IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO. 105/2021

Deposition of Witness for P.W.10

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.டாக்டர்.நாகேந்திரகுமார் |
| FATHER NAME | - | M. ARJUNAN |
| VILLAGE | - | PARKTOWN |
| TALUK | - | CHENNAI |
| OCCUPATION | - | இணை பேராசிரியர் தடய அறிவியல் துறை |
| AGE | - | 40/M |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 30.07.2025.

எதிரிகள் ஆஜர்

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சென்னை அரசு மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவ உயர் நிலை துறையில் இ ணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.01.2021 அன்று பிற்பகல் 03.40 மணியளவில் நான் அரசு வேலூர் மருத்துவக் கல்லூரி மருததுவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணியில் இருந்த போது வேலூர் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின் படி வேலூர் வடக்கு சட்ட ஒழுங்கு காவல் நிலைய குற்ற எண்.26/2021 வழக்கில் இறந்து போன திரு.வேலு வயது 50 ஆண் என்பவரது பிரேதத்தை தோண்டி எடுக்கப்பட்ட இடத்திலேயே வைத்து பிரேத பரிசோதணை செய்யுமாறு வேண்டு கோள் கடிதத்தை முதல் நிலை காவலர் எண்.2352 திரு.ஸ்டாலின் ஜெபராஜ் என்பவர் மூலம் பெற்றுக் கொண்டேன். என் தலைமையிலான மருத்துவக் குழு பிரேதமானது தோண்டி எடுக்கப்பட்ட இடமான பாலாற்றின் தென் கரையில்

அமைந்துள்ள வேலூர் பாலாறு சுடுகாட்டிற்கு (தகன மேடையின் பின்புறம்) சென்றோம். அந்த தோண்டி எடுக்கப்பட்ட இடத்திற்கு அருகில் வைக்கப்பட்டிருலுந்த பிரேதத்தை அதே நாளில் மாலை 4.25 மணியளவில் பிரேதத்தை இறந்த நபரின் மனைவி திருமதி.ஈஸ்வரி மற்றும் காவலர் ஸ்டாலின் ஜெபராஜ் ஆகியோரால் அடையாளம் காணப்பட்டு பிரேத கூறாய்வு செய்தேன். . கூறாய்வின் போது உடல் அழுகிய நிலையில் காணப்பட்டதால் அங்கமச்ச அடையாளங்கள் எதுவும் தென்படவில்லை. மரண விரைப்பு உடல் முழுவதும் காணப்படவில்லை. அந்த பிரேதமானது மிதமான உடல் வாகு கொண்ட ஆணின் உடையதாகும் அதன் மேற்பரப்பில் மண் துகள்கள் ஒட்டிக் கொண்டும் காணப்பட்டது. மேற் தோல் காய்ந்த் நிலையில் , வெளிர் பழுப்பு நிறத்திலும் காணப்பட்டது. உடல் முழுவதும் உள்ள தோலின் மேல் அடுக்கு ஆங்காங்கே உரிந்த நிலையில் காணப்பட்டது. பிரேதத்தின் வயிறு மார்பு மற்றும் முகம் காற்றடைத்தும் ஊதியும் காணப்பட்டது. இரு கண்களும் அழுகிய நிலையில் சிதைந்து காணப்பட்டது. கைவிரல் நகங்கள் வெளிறி இருந்தன. கருஞ்சாம்பல் நிற தலைமுடி மற்றும் நகங்கள் எளிதில் பிடுங்கக் கூடிய நிலையில் இருந்தன. அவரது உடலில் காணப்பட்ட துவாரங்கள் மற்றும் தோல் இடைவெளியில் இருந்து முழுமையாக வளர்ச்சி அடைந்த ஒரே இனத்தைச் சார்ந்த புழுக்கள் வெளிவந்த வண்ணம் காணப்பட்டன. அவரது வலது கையின் முட்டிக்கு கீழ் பகுதி , இடது கையின் மணிக்கட்டுக்கு கீழ் பகுதி, மற்றும் வலது காலின் காணுக்காலுக்கு கீழ் பகுதி ஆகியன எலும்புக் கூடாக மாறியும் அவற்றில் சில பாகங்கள் இல்லாமலும் காணப்பட்டன. இவை வேலு இறந்த பின்பு உண்டான சிறு மிருகங்களின் செயல்களால் உண்டாகியிருக்கலாம். மேலும் அவர் உ டலில் காணப்பட்ட இறப்பிற்கு முன் உண்டான காயங்கள்

பின்வருமாறு:–

காயம் 1. கிடைமட்டமாக சாய்ந்த கத்திக்குத்துக் காயம் 6.2x2.5 cmx இடது நெஞ்சுக்கூட்டுக் குழி ஆழத்துடன் இடது மார்பின் மேற்பகுதி காரை எலும்புக்கு சற்றுக் கீழே காணப்பட்டது. அதன் ஓரங்கள் சிராய்த்தும், கன்றியும் காணப்பட்டன. அதன் தடம் கீழ் நோக்கியும் பின் நோக்கியும் வலது புறம் நோக்கியும் 2 ஆம் விலா எலும்பிடை பகுதியில் காணப்பட்டது. தொடர்ந்து கூறாய்வு செய்ததில் விலா எலும்பிடை தசைகள் , இடது நுரையீரலின் மேற்பகுதி மற்றும் மகாதமனியின் மேல் எழும்பும் பகுதி (Ascending aorta) ஆகியவை துளைக்கப்பட்டு காணப்பட்டன. அதனைச் சுற்றியுள்ள மென் திசுக்கள் கன்றியும் இரத்தம் வெளிப்பட்டும் காணப்பட்டன. இரு நுரையீரல்களும் லேசாக சுருங்கியும் அழுகியும் காணப்பட்டன. இடது நுரையீரலின் மேற்பகுதி முழுமையாக சுருங்கி காணப்பட்டது.

காயம் 2. செங்குத்தாக காய்ந்த கத்திக் குத்து காயங்கள் (அ) 4.5x1.8cmx வயிற்றுக் குழி ஆழத்துடன் வயிற்றின் இடது வெளிப்பகுதியின் மேற்புறத்தில் காணப்பட்டது. அதன் தடம் கீழ் நோக்கியும் வலது புறம் நோக்கியும் சென்றது.(ஆ) 4.2x1.8cmx வயிற்றுக் குழி ஆழத்துடன் வயிற்றின் இடது வெளிப்பகுதியின் நடுப்பகுதியின் காணப்பட்டது. அதன் தடம் மேல் நோக்கியும், பின் நோக்கியும் ,வலது புறம் நோக்கியும் சென்றது. (இ) 3.5x1.5cmx இடுப்புக் குழி ஆழத்துடன் வயிற்றின் இடது வெளிப்பகுதியின் கீழ்புறத்தில் காணப்பட்டது. அதன் தடம் பின் நோக்கியும், வலது புறம் நோக்கியும் சென்றது. மேற்கூறிய 3 காயங்களின் ஓரங்களும் சிராய்த்தும், கன்றியும் காணப்பட்டன. தொடர்ந்து கூறாய்வு செய்ததில் வயிற்றுக் குழியில் பெருமளவு இரத்தப் போக்கு ஏற்பட்டு அழுகிய நிலையில் இரத்தம் காணப்பட்டது. அதன் அடியில் இருந்த இடது

சிறுநீரகம் , பெருகுடல், சிறுகுடல், சிறுகுடல் சவ்வு, முதுகுதண்டின் இடது புறம் உள்ள தசைகள் மற்றும் இடது common iliac இரத்த நாளங்கள் ஆகியன துளைக்கப்பட்டு காணப்பட்டன.

காயம் 3. சீரற்ற மேலோட்டமான கிழிந்த காயம் 2.3x1.1cmx தசை ஆழத்துடன் வலது தொடையின் வெளிப்புறத்தில் புழுக்களுடன் காணப்பட்டது. அதன் அடியில் இருந்த திசுக்கள் துளைக்கப்படாமலும், அழுகியும் காணப்பட்டன.

விலா எலும்புகள் இயல்பாக காணப்பட்டன. இருதயம் வளவளவென்றும், அழுகியும் காணப்பட்டது. அதன் அனைத்து அறைகளும் காலியாகவும், வால்வுகள் அழுகியும் காணப்பட்டன. மகா தமனியின் உட்புறம் கொழுப்பு படிமங்கள் காணப்பட்டன. இருதய தமனிகள் இயல்பாக இருந்தன. நுரையீரல்கள் சுருங்கியும், மிருதுவாகவும், நெஞ்சுக் கூட்டின் உட்பகுதியில் ஒட்டிக் கொண்டும் அழுகிய நிலையில் காணப்பட்டன. இரு பக்க நெஞ்சுக்கூட்டுக் குழிகளிலும் தலா 50 மில்லி துர்நாற்றத்துடன் கூடிய ரத்தம் கலந்த தெளிவற்ற திரவம் காணப்பட்டது. குரல்வளை மற்றும் மூச்சுக்குழாய் காலியாகவும் அதன் சளிப்படலம் அழுகியும் காணப்பட்டது. நாவடி எலும்பு இயல்பாக காணப்பட்டது. இரைப்பை காலியாகவும், அதன் சளிப்படலம் அழுகியும் காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல், வலது சிறுநீரகம் ஆகியன அழுகிய நிலையிலும் சுருங்கியும் காணப்பட்டன. குடல்களில் காற்றடைத்து காணப்பட்டது. சிறுநீர் பை காலியாக இருந்தது. இடுப்பெலும்பு, முதுகெலும்புகள் மற்றும் இதர நீண்ட எலும்புகள் இயல்பாக இருந்தன. கபாலம், டியுரா சவ்வு ஆகியன இயல்பாக இருந்தன. மூளை நீர்த்த நிலையில் காணப்பட்டது. உடல் உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்டு இரசாயன பரிசோதனைக்கு அனுப்பட்டு அவற்றில் எவ்வித நச்சுப் பொருட்களோ அல்லது எத்தைல்

ஆல்கஹாலோ கண்டறியப்படவில்லை என அறிக்கை தரப்பட்டது. இதனால் மேற்படி இறந்த நபர் மார்பு மற்றும் வயிற்றுப் பகுதிகளில் ஏற்பட்ட கத்திக் குத்திக் காயங்களினால் உண்டான அதிகப்படியான இரத்தப் போக்கு மற்றும் அதிர்ச்சியினால் இறந்திருக்கக் கூடும் என்றும் இறந்த நபர் பிரேத பரிசோதனைக்கு சுமார் 5 முதல் 10 நாட்களுக்குள்ளாக இறந்திருக்கக் கூடும் என்றும் இறுதிக் கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். சடல கூறாய்வு அறிக்கை அ.த.சா.ஆ.6, இறப்பிற்கான காரணம் குறித்து இறுதிக் கருத்துரை அ.த.சா.ஆ.7 ஆகும். ஒரு நபர் மது அருந்திய உடனேயே அது இரத்தத்தில் கலப்பதற்கு முன்பாகவே கொல்லப்பட்டிருந்தால் அந்த நபரின் உடல் உள்ளுறுப்புகளில் மதுவிற்கான அடையாளங்கள் இரசாயன பரிசோதனையில் காணப்படாது. இரைப்பையில் மட்டுமே காணப்படலாம். இந்த வழக்கில் இறந்து போன நபரின் உடலானது அழுகிய நிலையில் இருப்பதால் Postmortem Purging எனப்படும் திரவங்கள் வெளிவரும் மாற்றத்தினால் மூக்கு , வாய் மற்றும் ஆசனவாய் உடலில் உள்ள திரவங்கள் வெளியேறும் போது வயிற்றில் மட்டுமே இருந்த ஆல்கஹால் வெளியேறியிருக்கலாம். என்னிடம் காண்பிக்கப்படும் கத்தி, வீச்சரிவாளால் மேற்கண்ட காயங்கள் ஏற்பட்டிருக்கும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்–இல்லை</u>

நீதிமன்ற கேள்வி.

5 முதல் 10 நாட்கள் முன்னராக இறப்பு ஏற்பட்டுள்ள அழுகிய நிலையில் உள்ள பிரேதத்தை அடையாளம் காண இயலுமா என்றால் இந்த வழக்கில் இறந்த நபரின் மேற் தோல் காய்ந்த நிலையில் இருந்ததால் அவரது உடல் உப்பி இருந்தாலும் அவரது நெருங்கிய உறவினரால் அவரது முக அமைப்பை அடையாளம் காண முடிந்தது.

30/7/25

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 30.07.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

30.7.25

**Additional District Judge(FTC)**
**Vellore.**